# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: ஆறு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 ஆனி 26 செவ்வாய்க்கிழமை (10.07.2007) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 203







# மங்கள தலைமையிலான குழுவினர்

# நாளை 11 இல் இந்தியாவுக்கு பயணம்

## கட்சியின் நிலைப்பாட்டை விளக்குவாராம்



(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சி மக்கள் பிரிவின் அமைப்பாளர்களான மங்கள சமரவீரவும், சிறிபதி சூரியாராட்சியும் எதிர்வரும் 11 ஆம் திகதி இந்தியாவுக்குச் செல்லவுள்ளனர். இந்தியா செல்லும் அவர்கள் அங்கு அரசியல் தலைவர்களைச் சந்தித்து தமது கட்சியின் நிலைப்பாட்டை விளக்கவுள்ளனர்.

(06 ஆம் பக்கம் பார்க்க)

### மதவாச்சியில் நேற்று இளைஞர் சுட்டுக்கொலை

(வவுனியா)

வவுனியா மதவாச்சியில் தமிழ் இளைஞர் ஒருவர் நேற்றுக் காலை அடையாளம் தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளார். சுட்டுக்கொல்லப்பட்டவர் வவுனியா வீரபுரத்தைச் சேர்ந்த கேதீஸ்வரன் (வயது 40) என தெரியவந்துள்ளது.

மோட்டார் சைக்கி (06 ஆம் பக்கம் பார்க்க)

## யுத்த நிறுத்த உடன்படிக்கையில் கடல் எல்லை நிர்ணயிக்கவில்லை

### கடற்படைத் தளபதி தெரிவிப்பு

(கொழும்பு)

யுத்த நிறுத்த ஒப்பந்தமானது கடல் எல்லைகளை நிர்ணயிக்கவில்லை என்றும் தமது கடற்படையின் கட்டுப்பாட்டிலேயே இலங்கையின் கடற்பிராந்தியம் தொடர்ந்தும் இருக்கும் என்றும் கடற்படைத் தளபதி வசந்த கரனா கொட தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் இலங்கை கடற்பிராந்தியத்தை பயன்படுத்துவதற்கு தாங்கள் ஒரு போதும் அனுமதியளிக்கமுடியாது என்றும் அவர் கூறியுள்ளார். கொழும்பு ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் இதனைத் தெரிவித்தார்.

யாழ்.குடாநாட்டில் உள்ள மக்களுக்கு மட்டுமன்றி அங்கு நிலை கொண்டுள்ள இராணுவத்தினருக்கான விநியோகங்களும் தற்போது கடல் மார்க்கமாகவே இடம் பெற்று வருவதாகவும் இந்த போக்குவரத்து ஒழுங்குகளை கடற்படையினர் சிறப்பாக மேற்கொண்டு வருவதாகவும் கடற்படைத் தளபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

கடற்படையினரின் செயற்பாடுகள் எதிர்காலத்தில் கணிசமான அளவு அதிகரிக்கவுள்ளதாகவும் அதனை முன்னிட்டு வலிமையான கடற்படையினை கட்டியெழுப்பும் பணி தற்போது மேற் (06 ஆம் பக்கம் பார்க்க)

## சவுதியில் மரண தண்டனையை எதிர்நோக்கும் இலங்கைப் பெண்ணை காப்பாற்ற முயற்சி

(கொழும்பு)

சவுதிஅரேபியக் குழந்தையைக் கொன்றதாகக் குற்றம் சாட்டப்பட்டு மரண தண்டனையை எதிர்நோக்கும் மூதூர்ப் பெண்ணை மீட்பதற்கான இறுதிக்கட்ட முயற்சிகள் நடக்கின்றன. சவுதி அரேபியாவில் நான்கு மாதக் குழந்தையைக் கொன்றதாகக் கூறி இலங்கையைச் சேர்ந்த இளம் முஸ்லிம் பணிப் பெண்ணான ரிஸானா நபீக் அவர்களுக்கு மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வு கடந்த மாதம் மரண தண்டனை விதித்தது.

அவர் மேன்முறையீடு செய்வதற்கு அவருக்கு ஒரு மாத கால அவகாசம் வழங்கப்பட்டது. அந்தக் காலக்கெடு இன்னும் ஒரு வாரத்தில் முடிபடையவுள்ளது. அவர் இப்போது தண்டனையை எதிர்நோக்குகிறார்.

சவுதி அரேபியாவைப் பொறுத்தவரை மரண தண்டனை(06 ஆம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்பாளர்களின் எண்ணிக்கையை இரு மடங்காக்க க.கா.குழு தீர்மானம்

(கொழும்பு)

தமது கண்காணிப்பாளர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க இலங்கை போர் நிறுத்த கண்காணிப்புக்குழு முடிபு செய்துள்ளது. தமது குழு பலத்த சவால்களுக்கு முகம் கொடுத்து வரும் நிலையில் தாம் இம் முடிபை மேற்கொண்டுள்ளதாக யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் லார்ஸ் சொல்பேர்க் தெரிவித்துள்ளார்.

தற்போதைய சூழ்நிலையில் கண்காணிப்பாளர்களின் எண்ணிக்கையை இரு மடங்காக்கவேண்டியுள்ளது. தற்போது 30 வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்கள் உள்ளனர். அவர்களின் எண்ணிக்கையை 60 ஆக்க தாம் தீர்மானித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை, தமக்கு வழங்கப்பட்ட ஆணையின்படி பாதுகாக்க தாம் முடிபு செய்துள் (06 ஆம் பக்கம் பார்க்க)

## கிளி.-முல்லைத்தீவைக் கைப்பற்றும் யுத்தத்திற்கு ஐ.தே.கட்சி ஆதரவாம்

(கொழும்பு)

முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சியைக் கைப்பற்ற மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் யுத்தம் நடத்தினால் ஆதரவளிப்போம் என்று ஐக்கிய தேசியக்கட்சி அறிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று ஊடகவியலாளர்களிடம் பேசிய ஐக்கிய தேசியக்கட்சியின் லக்ஸ்மன் கிரியெல்ல கூறியதாவது;

சிறார்களின் வாழ்க்கையை ஏலத்திலே விட்டுவிட்டு கேளிக்கைக்காக குடும்பிமலை (தொப்பிக்கல) யுத்தத்தை மகிந்த அரசாங்கம் நடத்துகிறது. குடும்பிமலை யுத்தத்தை ஊடக கேளிக்கைகளுக்காக அரசாங்கம் முக்கியத்துவப்படுத்துகிறது.

அதே பகுதியை (06 ஆம் பக்கம் பார்க்க)

### யூலை 14 இல் லண்டனில் பேரணி

ஈழத் தமிழர் மீதான அரசாங்கத்தின் மனித உரிமை மீறல்களைக் கண்டிக்கும் மாபெரும் பேரணி லண்டனில் எதிர்வரும் சனிக்கிழமை நடைபெறவுள்ளது. இக் கண்டனப் பேரணியின்ன ஒழுங்கு செய்துள்ள பிரித்தானிய நகராட்சி மன்றக் குழுவும் அங்கத்தவர்களும் ஏனைய தமிழ் அமைப்புக்களும் அழைப்பு விடுத்துள்ளனர். (ச-5)

### கொழும்பில் நேற்று பாரிய தேடுதல்

(கொழும்பு)

கொழும்பில் நேற்று முன்தினம் இரவு முதல் நேற்று அதிகாலை வரை பாரிய தேடுதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. நேற்று முன்தினமிரவு 11 மணி முதல் நேற்றுக் காலை 6 மணிவரை இத் தேடுதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கொழும்பு மத்திய பிராந்தியத்திற்கு பொறுப்பான (06 ஆம் பக்கம் பார்க்க)

### மட்டுவில் தெற்கில் இளைஞன் சுட்டுக்கொலை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி மட்டுவில் தெற்கில் இளைஞர் ஒருவர் நேற்று முன்தினம் மாலை ஆறு மணி அளவில் ஆயுததாரிகளினால் கடத்திச்செல்லப்பட்டு சுட்டுக்கொல்லப்பட்டார். சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த தர்மகுலசிங்கம் சிவநேசன் (வயது 22) என்ற இளைஞனே சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

குறித்த இளைஞனின் வீட்டிற்கு இரண்டு மோட்டார் சைக்கிள்களில் சென்ற நான்கு ஆயுததாரிகள் அவரை கடத்திச் சென்று மறைவிடம் (06 ஆம் பக்கம் பார்க்க)

### கண்டியில் 15 பேர் கைது

(கொழும்பு)

கண்டியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புத் தேடுதலின்போது 15 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். கண்டியில் தங்கியிருப்பதற்கான உரிய காரணத்தை முன்வைக்காதவர்கள் கைது செய்யப்பட்டிருப்பதாக கண்டி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.கைது செய்யப்பட்ட அனைவரும் வடக்குக் கிழக்குப் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்பட்டது. (ச-5)

## ஒவ்வொரு நான்கு மணி நேரத்துக்கு இலங்கையில் ஒருவர் படுகொலை

(கொழும்பு)

இலங்கையில் ஒவ்வொரு 4 மணி நேரத்துக்கும் ஒரு படுகொலைச் சம்பவம் நடைபெறுவதாக மேற்கு மாகாணத்தின் வடபகுதி பிரதி பொலிஸ்மா அதிபர் சரத் ஜயசுந்தர தெரிவித்துள்ளார். மல்வானை முபாரக் கல்லூரியில் குற்றங்கள் தொடர்பிலான கருத்தரங்கில் அவர் பேசியதாவது,

இலங்கையில் குற்றச் செயல்கள் வீதம் மேற்கு மாகாணத்தில் நிகழ்கின்றன. ஒவ்வொரு 4 மணி நேரமும் ஒரு படுகொலைச் சம்பவமும், (06 ஆம் பக்கம் பார்க்க)


உள்ளே

சனி மாற்றம் உங்களுக்கு எப்படி?


அன்பார்ந்த A/L மாணவர்களே!

கொழும்பு றோயல் கல்லூரியின் A/L 2007 யூலை இரசாயனவியல் முன்னோடி வினாத்தாள் நாளைய வலம்புரியில் வெளிவரும்.

## எதிர்க்கட்சியின் பிரசாரத்தை முறியடிக்க நாடு முழுவதிலும் விசேட கூட்டங்கள்

### அமைச்சர் ஜெயராஜ் தெரிவிப்பு

அரசாங்கத்தின் அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் தொடர்பாக எதிர்க்கட்சியினர் பரப்பி வரும் பொய்ப் பிரசாரங்கள் தொடர்பாக மக்களுக்கு உண்மையை விளக்கும் நோக்கில் நாடளாவிய ரீதியில் கூட்டங்களை நடத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கூறியதாவது, கிழக்கு மாகாணத்தின் பெரும்பகுதிகளைப் படையினர் தற்போது மீட்டுள்ளனர். அப் பிரதேசத்தின் இறுதி இலக்கான தொப்பிக்கலப் பகுதியும் இன்னும் சில நாள்களுக்குள் மீட்கப்பட்டு விடும்.

இந்நிலையில் அரசாங்கம் முன்னெடுத்து வருகின்ற கிழக்கு மீட்பு நடவடிக்கைகள் மற்றும் அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் தொடர்பாக நாட்டு மக்கள் மத்தியில் தப்பான அபிப்பிராயத்தை ஏற்படுத்துவதற்கு எதிர்க்கட்சிகள் முயற்சித்து வருகின்றன.

அத்துடன் உலக சந்தையில் அதிகரித்துச் செல்கின்ற மசகு எண்ணெயின் விலை ஏற்றத்தினால் நாட்டில் எரிபொருள்கள் உள்ளிட்ட இதர அத்தியாவசியப் பொருள்களின் விலையேற்றத்தைத் தூக்கிப் பிடித்துக் கொண்டு அரசாங்கத்தின் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு எதிராக செயற்பட்டு வருகின்றனர்.

இவற்றின் உண்மைத் தன்மையை நாட்டு மக்களுக்குத் தெளிவுபடுத்திக் கூறும் வகையில் இம் மாதம் முதல் இக் கூட்டங்கள் நடைபெறவுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ச-5)

## சிறார்களைப் படையில் சேர்ப்பு ஐ.நா.செயலாளரிடம் அறிக்கை

(கொழும்பு)

அரசாங்கத்தின் துணை இராணுவக் குழுவான கருணா குழுவின் சிறார் படைச் சேர்ப்புத் தொடர்பான புதிய அறிக்கையினை ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் நாயகமான பான் கீ மூனுக்கு அடுத்த மாதம் சமர்ப்பிக்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சிறார் படைச் சேர்ப்புத் தொடர்பாக கருணா குழுவிற்கும் ஐக்கிய நாடுகள் சபையின் சிறார் பாதுகாப்பு அமைப்பான யுனிசெப்பிற்கும் இடையில் கருத்து மோதல்கள் இடம்பெற்று வரும் நிலையில் இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இது தொடர்பில் யுனிசெப்பின் கொழும்புப் பகுதியின் பாதுகாப்புத் தலைவரான அன்டி புறூக்ஸ் தெரிவித்துள்ளதாவது,

இலங்கையில் சிறார்களின் உரிமைகளுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் வன்முறைகள் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபையின் செயற்குழு மீண்டும் ஒரு தடவை ஒக்டோபர் மாதம் ஆராயவுள்ளது.

இருந்தபோதும் மோதல்களில் பாதிக்கப்பட்ட சிறார்கள் தொடர்பான அறிக்கையினை எதிர்வரும் மாதம் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகத்திடம் கையளிக்கவுள்ளது.

கடந்த வருடம் சிறார்களைப் படையில் சேர்த்தமைக்காக இந்த அறிக்கையில் கருணா குழு இணைக்கப்பட்டுள்ளது. இலங்கையில் தற்போது ஏதாவது ஆயுதக் குழுக்கள் சிறார்களைப் படையில் பயன்படுத்துகிறார்களா? என கண்காணிப்பதற்கு இவை முக்கியமான நாள்கள் ஆகும் என்றார் அவர். (எ-5)

## பொலிஸ் கான்ஸ்டபிள் மர்ம மரணம்

குற்றப்புலனாய்வுத் திணைக்களத் தலைமையகத்தின் கான்ஸ்டபிள் ஒருவர் மர்மமான முறையில் மரணமடைந்துள்ளார்.

குற்றப்புலனாய்வுத் திணைக்களத் தலைமையக நுழைவாயிலில் கடந்த சனிக்கிழமை காவல் பணியில் இருந்தபோது அவர் மர்மமான முறையில் உயிரிழந்துள்ளார்.

இச் சம்பவம் குறித்து விசாரணை நடத்தி வருவதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். கொழும்பு மருத்துவமனையில் தற்போது வைக்கப்பட்டுள்ள அவரது சடலத்தைப் பரிசோதனை செய்து வருவதாக மருத்துவமனை அதிகாரி அல்விஸ் தெரிவித்தார். (ச-5)

## கல்வி நிர்வாக சேவையின் தடைதாண்டல் பரீட்சை

(கொழும்பு)

இலங்கை கல்வி நிர்வாக சேவையின் III ஆம் வகுப்பு உத்தியோகஸ்தர்களுக்கான முதலாவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் கொழும்பில் நடைபெறவுள்ளது.

இதற்கான விண்ணப்பப் படிவங்கள் கோரப்பட்டுள்ளன. எதிர்வரும் 13 ஆம் திகதி வெளியிடப்படவுள்ள வர்த்தமானி அறிவித்தலின்படி விண்ணப்பப் படிவத்தைத் தயாரித்து ஓகஸ்ட் மாதம் 13 ஆம் திகதிக்கு முன்னராகப் பரீட்சை ஆணையாளர், பரீட்சைத் திணைக்களம், ஹெலவத்த, பத்திரமுல்ல என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

விண்ணப்பதாரி திணைக்களத் தலைவரூடாகப் பதிவுத் தபாலில் விண்ணப்பப் படிவத்தை அனுப்பி வைக்க வேண்டும் என்றும் கடிதஉறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சைப் பெயர் குறிப்பிடப்பட வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இப் பரீட்சை தொடர்பான விபரங்கள் அடங்கிய, எதிர்வரும் 13 ஆம் திகதி வெளியாகவுள்ள வர்த்தமானி அறிவித்தலை இன்று முதல் வலம்புரி அலுவலகத்தில் பார்வையிட முடியும். (ச)

## நவோத்யா பாடசாலை வாரம்

யாழ்.கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய நவோத்யா பாடசாலை வாரம் இன்று காலை 8 மணிக்கு 'எமது பணிகள் தேசத்தின் முன்னேற்றத்திற்கே' என்ற தொனிப் பொருளில் கொண்டாடப்படவுள்ளது.

ஜூலை 7 ஆம் திகதி தொடக்கம் 14 ஆம் திகதி வரை கொண்டாடப்படும் நவோத்யா பாடசாலை வாரம் சமய சமூக விழுமிய தினமாகவும் விஞ்ஞான கணித மற்றும் தொழில் நுட்ப தினமாகவும் இன்று பாடசாலையில் கொண்டாடப்படுகின்றது.

மேற்படி நிகழ்வுகள் எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை மொழித்திறமை மதிப்பீட்டுத் தினமாகவும் விளையாட்டு உடற்பயிற்சித் தினமாகவும் மாணவர் ஆக்கமதிப்பீட்டுத் தினமாகவும் கொண்டாடப்படவுள்ளது. (ச)

## ரெலிக்கொம் கட்டணங்களை குறைக்க நீதிமன்றம் உத்தரவு

ரெலிக்கொம் தொலைபேசிக் கட்டணங்களைக் குறைப்பதற்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ரெலிக்கொம் தொலைபேசிக் கட்டணங்களை அதிகரிப்பதற்கு எதிராக நுகர்வோர் சங்கம் தாக்கல் செய்த மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே நீதிமன்றம் இவ்வுத்தரவைப் பிறப்பித்துள்ளது.

இதனடிப்படையில் ரெலிக்கொமின் வீடுகளுக்கான இணைப்பு 495 ரூபாவிலிருந்து 350 ரூபாவாகவும் வர்த்தகருக்கான தொலைபேசி இணைப்பு ஆயிரத்து 200 ரூபாவிலிருந்து 950 ரூபாவாகவும் குறைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இவை செயற்படுத்தக்கூடியவை என பிரதம நீதியரசர் தெரிவித்துள்ளார். (ச)

## பல்கலைக்கழகங்களுக்கு அடுத்த வருடம் முதல் மேலும் இரண்டாயிரம் மாணவர்களுக்கு அனுமதி

(கொழும்பு)

பல்கலைக்கழகங்களுக்கு அடுத்த வருடம் முதல் 2 ஆயிரம் மாணவர்களை மேலதிகமாக உள்வாங்கவுள்ளதாக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பல புதிய பட்டப்படிப்பு அலகுகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் அடுத்த வருடம் பல்கலைக்கழகங்களுக்கு மேலும் 2 ஆயிரம் மாணவர் களுக்கு அனுமதி வழங்குவதற்குப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு திட்டமிட்டுள்ளது.

இதன்படி இவ்வருடம் 18 ஆயிரம் மாணவர்கள் அனுமதிக்கப்பட்டதற்குப் பதிலாக அடுத்த வருடம் 20 ஆயிரம் மாணவர்கள் அனுமதிக்கப்படுவர். பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுத் தலைவர் பேராசிரியர் காமினி சமரநாயக்க நேற்று முன்தினம் டெய்லி மிரர் பத்திரிகைக்கு கூறுகையில்,

தற்போது அவர்கள் இவ்விடயம் பற்றி ஒவ்வொரு பல்கலைக்கழகத் துணைவேந்தர்களிடமும் பேச்சுவார்த்தை நடத்துவதாகக் கூறினார். பேராதனை, சப்ரகமுவப் பல்கலைக்கழகங்கள் இதற்கு ஆதரவளித்துள்ளதாகப் பேராசிரியர் சமரநாயக்க கூறினார்.

நேற்று ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக துணைவேந்தருடன் கலந்துரையாடல் நடாத்தியுள்ளதாகவும் இம் மாதம் 16 ஆம் திகதியுடன் சகல பல்கலைக்கழகங்களுடனான கலந்துரையாடல்களும் முடிபடைந்துவிடும் எனவும் அதற்குப் பின் அடுத்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் கூறினார்.

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு தலைவர் நாட்டில் தற்பொழுது நிலவும் பலவிதமான பிரச்சினைகளுக்கிடையே 'தாம் உயர் கல்வித்துறையில் அபிவிருத்திகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது எனத் தெரிவித்தார்.

பல்கலைக்கழக மாணவர் அமைப்பும் இந்தப் பிரேரணையை வரவேற்பதாகவும் இது தங்கள் முக்கிய கோரிக்கைகளில் ஒன்றெனவும் அவர்கள் கூறியுள்ளனர். (ச-6)

## புனரமைப்பு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை நகரசபைப் பகுதியில் பருத்தித்துறை-தும்பளை வீதியில் அமைந்துள்ள புராதன தெருமூடிமடத்தின் கூரை வேலைகள் பருத்தித்துறை நகரசபையால் திருத்தி புனரமைக்கப்பட்டு வருகின்றது. (ச-52)

## வடமராட்சிக் கடலில் இந்தியப் படகுகள்

(பருத்தித்துறை)

வடமராட்சிக் கடற்பரப்பினுள் நேற்று இந்திய மீனவர்கள் நுழைந்து மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். யுத்தம் காரணமாக தடைப்பட்டிருந்த இந்திய மீனவர்களின் வருகை நேற்று ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக அப் பகுதி மீனவர்கள் தெரிவித்தனர்.

திடீரென சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட படகுகள் இலங்கைக் கடற்பரப்புக்குள் நுழைந்து தொழில் ஈடுபட்டதாக அவர்கள் தெரிவித்தனர்.

தாம் நேரக் கட்டுப்பாட்டின் அடிப்படையில் தொழிலில் ஈடுபட்டு வரும் வேளையில் இந்திய மீனவர்கள் அத்துமீறி நுழைந்து மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருவதாகவும் இதனால் தமது கடல்வளம் அழிக்கப்படுவதாகவும் மீனவர்கள் கவலை தெரிவித்துள்ளனர். (ச)

## கொக்குவில் பகுதியில் திருட்டு அதிகரிப்பு

(கொக்குவில்)

கொக்குவில் பகுதியில் அண்மைய நாள்களாக இரவு நேர கொள்ளைச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

இரவு 7 மணிக்கும் 9 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் இடம்பெற்று வரும் இக் கொள்ளைச் சம்பவங்களால் மக்கள் பீதியடைந்துள்ளனர். கடந்த 7 ஆம் திகதி இரவு 7.30 மணியளவில் ஆடியபாதம் வீதியில் வீடொன்றினுள் புகுந்த திருடர்கள் அங்கிருந்த பணம் மற்றும் நகைகளைத் திருடிச் சென்றுள்ளனர்.


இதேவேளை கொக்குவில் நாமகள் வித்தியாலயத்திற்கு அண்மையில் உள்ள வீடொன்றிலும் திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர். துப்பாக்கியைக் காட்டி மிரட்டியே இந்தத் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ச)


## பதவி வெற்றிடங்கள்

- அலுவலகச் செய்தியாளர்கள் (ஆண்கள்)
- விளம்பர முகவர்கள் (ஆண்கள்)
- கணினிப் பக்க அமைப்பாளர்கள் (ஆண்கள், இரவுக் கடமை)
- ஓவ்செற் இயந்திர இயக்குநர்கள் (ஆண்கள்)
- ஓவ்செற் இயந்திர பயிலுநர்கள் (ஆண்கள்)

தகுதியுடையவர்களும், அலுவலகத்திற்கு அண்மையில் வசிப்பவர்களும் நேரில் வரவும்.

ஆளணி முகாமையாளர்
வலம்புரி

பருத்தித்துறை பசுபதீஸ்வரர் (சிவன் ஆலயம்) பக்த அடியார்கள் சூழ தேரேறி வீதிவலம் வரும் காட்சி. (படம்:-பரு. நிருபர்)

# சனி மாற்றம்

சனி பகவான் ஒரு ராசியில் ஏறத்தாழ 2 1/2 ஆண்டுகள் சஞ்சரிப்பார். இந்த ஆண்டு 18.07.2007 முதல் 24.08.2009 வரை சிம்ம ராசியில் சஞ்சரிக்கிறார். இந்த ராசி, சனி பகவானுக்கு பலம் குறைந்த ராசியாகக் கருதப்படுகிறது. இது அவரின் மூலத்ரிகோண ராசிக்கு நேர் எதிர் ராசியாகும்.

சனி பகவான் ஒருவருடைய ராசிக்கு 12ஆம் இடம், ஜன்மராசி, 2ஆம் வீடு இவைகளில் சஞ்சரிக்கும் காலத்தை ஏழரை சனி என்று அழைப்பார்கள். 4ஆம் ராசியில் சஞ்சரிப் பதை 'அர்த்தாஷ்டமம்' என்றும் 8ஆம் ராசியில் சஞ்சரிப்பதை 'அஷ்டமம்' என்றும் கூறுவர்.

சனி பகவான் 12 ராசிகளையும் ஒரு ராசிக்கு 2 1/2 ஆண்டுகள் வீதம் 30 ஆண்டுகளில் கடக்கிறார். ஒரு மனிதரின் வாழ்க்கையில் சராசரியாக மூன்று முறை ஏழரை சனி வரலாம். அவற்றை மங்கு சனி, பொங்கு சனி மற்றும் விரய சனி என்று குறிப்பிடுவார்கள். சனி பகவான் 3, 6, 10, 11ஆம் ராசிகளில் சஞ்சரிக்கும் காலத்திலும் 7ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் காலத்திலும் (திக் பலம் பெறுவதால்) நன்மைகளைச் செய்வார்.

ஜெனன ஜாதகத்தில் சனிபகவான் அஷ்டமமான 8ஆம் இடத்தில் இருந்தால் அஷ்டமாதிபத்ய தோஷம் அகன்று நீண்ட ஆயுளைக் கொடுக்கிறார். சனி பகவானை ஆயுள் காரகன் என்றும் துக்க காரகன் என்றும் விதிகாரகன் என்றும் கூறுவார்கள். ஆறு பருவ காலங்களில் சனி பகவான் பின் பனிக் காலமான மாசி, பங்குனி ஆகிய இரண்டு மாதங்களை ஆள்கிறார்.



## மேடம்

இந்த ஆண்டு சனிப் பெயர்ச்சி:- அன்று சனி பகவான் உங்கள் ராசிக்கு அர்த்தாஷ்டம் (அஷ்டமம் என்றால் எட்டு, அர்த்தம் என்றால் பாதி. அதாவது 8இல் பாதி 4) என்கிற 4ஆம் ராசியிலிருந்து பஞ்சமம் என்கிற பூர்வ புண்ணிய ஸ்தானத்திற்குப் பெயர்ச்சி ஆகிறார்.

இது சிறப்பான அம்சமாகும். பூர்வ புண்ணிய ஸ்தானத்தில் அமர்ந்த சனி பகவான் உங்கள் தொழிலில் முன்னேற்றத்தைக் கொடுப்பார். பொருளாதாரத்தில் இருந்து வந்த இழுபறிகள் மாறி, வருமானம் சீராகும். உடல் உபாதை கள் குறிப்பாக மூட்டு வலி, முதுகுவலி, கை-கால் குடைச்சல் போன்றவை குணமாகும். பயணங்களால் மகிழ்ச்சி பெறுவீர்கள். தடைகளிலிருந்து விடுபடுவீர்கள்.

'ஸ்தான விருத்தி கரோதி மந்த' என்கிற ஜோதிட கூற்றுப்படி, சனி பகவான் இருக்கும் இடம் விருத்தியடையும். உங்கள் புத்தி, பூர்வ புண்ணிய மற்றும் புத்திர ஸ்தானத்தில் அமர்ந்துள்ள சனி பகவான், உங்கள் புத்தி சாதுர்யத்தைக் கூட்டுவார் எனவே அனைவராலும் பாராட்டப்படுவீர்கள்.

தவிர, புத்திர வழியில் மேன்மைகளைக் காண்பீர்கள். நெடு நாட்களாக தகராறில் இருந்த சொத்துக்கள் கைக்கு வந்துசேரும். கருப்பு நிறப் பொருட்களால் நன்மைகளைக் காண்பீர்கள்.

அதேசமயம் சனி பகவானின் பார்வை உங்கள் ராசிக்கு தன ஸ்தானத்தின் மீது படுகிறது. இதனால் வருமானம் வந்து கொண்டிருந்தாலும், செலவுகளும் சேர்ந்தே தொடரும் எனவே கவனமாக அத்தியாவசியச் செலவுகளை மட்டுமே செய்து கையிருப்பைத் தக்கவைத்துக் கொள்ளுங்கள். குடும்பத்தில் அமைதியான சூழ்நிலை நிலவினாலும் எக்கு தப்பாக எதையாவது பேசிவிட்டு பின் வம்பில் மாட்டிக்கொள்ளும் நிலைமை உண்டாகும்.

மற்றப்படி உங்கள ராசிக்கு களத்ர ஸ்தானத்தின் மீது படும் சனி பகவானின் பார்வை திருமண பந்தத்தை உறுதிப்படுத்தும். தாமதமாகும் திருமணங்கள் சனி பகவானின் அருட்பார்வையினால் நடந்தேறும். உற்றார் உறவினர்கள் மற்றும் நண்பர்க்ள் உங்களுக்கு உதவுவார்கள்.

மேலும் சனி பகவானின் அருட்பார்வை லாப ஸ்தானத்தின் மீதும் படுவதால் புதிய சொத்துக்கள் சேரும். நில புலன்கள் வாங்கும் யோகம் உண்டாகும். வெளிநாடு செல்லும் வாய்ப்புகளும் கிடைக்கும். மூத்த சகோதர, சகோதரி வழிகளிலும் நன்மைகளும், அனுகூலங்களும் உண்டாகும்.

உத்தியோகஸ்தர்களுக்கு அலுவலகத்தில் சுமுகமான சூழ்நிலை தென்படும். உங்கள் வேலைகளை தன்னம்பிக்கையுடன் செய்து முடிப்பீர்கள். பணப்புழக்கம் அதிகமாகும். உங்கள் வேலைகளுக்கு உரிய அங்கீகாரத்தை மேலதிகாரிகள் வழங்குவார்கள்.

அதேசமயம் சக ஊழியர்கள் சற்று தள்ளியே இருப்பார்கள். அவர்களை உங்களின் அமைதியான அணுகுமுறையினால் அரவணைத்துச் செல்லவும். மனதில் இருந்த ஒரு வித பயம் விலகி, தெளிவாகக் காரியமாற்றும் காலகட்டம் இது.

வியாபாரிகள் கடுமையாக உழைத்தால் எதிர்பார்த்த வருமானம் கிடைக்கும். கூட்டாளிகளும், நண்பர்களும் உங்களுக்குச் சாதகமாக இருப்பார்கள். கொடுக்கல், வாங்கல் விவகாரங்கள் அனுகூலமாகவே அமையும். முயற்சிகள் படிப்படியாக வெற்றியைக் கொடுக்கும். கடன்கள் கட்டுக்குள் இருக்கும்.

விவசாயிகளுக்கு இந்த சனிப்பெயர்ச்சி கூடுதல் விளைச்சலைக் கொடுக்கும். கொள்முதல் இலாபம் நன்றாகவே இருக்கும். அதேசமயம் புதிய நிலங்களை வாங்கும் யோசனைகளைத் தற்சமயம் தள்ளிப் போடவும்.

கால் நடைகளாலும் அதிக இலாபங்களை நீங்கள் எதிர் பார்க்கமுடியாது. அவைகளுக்காகச் செலவு செய்ய வேண்டி வரும். மற்றபடி பழைய குத்தகைப் பாக்கிகளை திருப்பிச் செலுத்துவதற்கான வாய்ப்புகள் உண்டாகும். வங்கிகளிடமிருந்தும் கடன் பெற முடியும்.

# உங்களுக்கு எப்படி

அரசியல்வாதிகள் வழக்கு விவகாரங்களில் சாதகமான தீர்ப்புகளைப் பெறுவார்கள். கட்சிப் பணியில் இருந்த குழப்பங்கள் விலகி, புதிய பொறுப்புகள் கிடைக்கும். உற்சாகமாக மக்கள் சேவையில் ஈடுபடுவீர்கள். மறைமுக எதிர்ப்புகள் நீங்கும்.

உங்களின் புதிய முயற்சிகளில் சாதகமான திருப்பங்களைக் காண்பீர்கள். அதேநேரம் அடுத்தடுத்து பயணங்களை மேற்கொள்ள வேண்டிவரும்.

இந்த ராசி கலைத்துறையினர், புதிய ஒப்பந்தங்களைப் பெறுவார்கள். பணவரவும் அதிகமாகும். பழைய ஒப்பந்தங்களை சிறப்பாக முடித்துக் கொடுப்பீர்கள். இதனால் உங்களின் பெயரும், புகழும் உயரும். புதிய வாகனங்கள் வாங்கும் யோகம் உண்டாகும். ரசிகர்கள் உங்களுக்கு ஆதரவு தருவார்கள். அதேநேரம் சோம்பலுக்கு விடை கொடுத்து அரும்பாடுபட்டு உழைத்துச் செயலாற்றவும்.

பெண்மணிகள் தெளிவான மனநிலையில் இருப்பார்கள். தெய்வ வழிபாட்டை சிரத்தையோடு மேற்கொள்ளுவார்கள். குழந்தைகளால் உங்களுக்குப் பெருமை சேரும். அதே நேரம் உடல்நலம் சுமாராகவே இருக்கும். மற்றப்படி உடன் பிறந்தவர்களால் சிறு நன்மைகளைப் பெறுவீர்கள். ஆடை, ஆபரணங்களை வாங்கி மகிழ்வீர்கள்.

மாணவமணிகளைப் பொறுத்தவரை படிப்பில் ஆர்வமில்லாமல் இருந்தவர்கள் உற்சாகமான மனநிலையைப் பெறுவார்கள். உடல் ஆரோக்கியம் வலுப்பெற சில எளிமையான பயிற்சிகளை மேற்கொள்ளுங்கள். நீங்கள் சாதனைகள் புரியக்கூடிய காலகட்டமாகவே இந்தப் பெயர்ச்சி அமைகிறது.

# உத்தியோகத்தர் தெரிவு

கடந்த மாதம் 28ஆம் திகதி நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெற்ற மத்திய- மாகாண அரச முகாமைத்துவ உதவியாளர் சங்கத்தின் 8ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டத்தில், நடப்பாண்டு உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இ. இரத்தினசிங்கம்(யாழ். மாநகரசபை)-தலைவர், த. கணேசமூர்த்தி (மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனை)-உபதலைவர், தி. உதயசூரியன்(விலைமதிப்பீட்டுத் திணைக்களம்)-செயலாளர், திருமதி பா. குமாரசாமி (யாழ். வலயக் கல்வி அலுவலகம்)-உபசெயலாளர், செல்வி லூயிஸ் பத்மினி (யாழ். பிரதேச செயலகம்)-பொருளாளர்.

நிர்வாக சபை உறுப்பினர்களாக 10 பேர் தெரிவுசெய்யப் பட்டுள்ளனர்.

திருமதி குலசேகரம் சரோஜா, ம. ஞானசீலன், அ. பத்மதாசன், திருமதி நந்தினி விஜயகுமாரன், திருமதி தர்சினி கிருஸ்ணகுமார், திருமதி சுமதி வியாகேசு, திருமதி தயாளன் சுகன்யா, க. இராமச்சந்திரன், க. சந்திரசேகரம்பிள்ளை, திருமதி திருக்குமரன் சிவாஜினி. (அ)

# அரசாங்கத்தைக் கவிழ்க்க முடியாது 2017 வரை மஹிந்தவே ஜனாதிபதி

இன்றைய அரசு சக்தி மிக்கது. அரசைக் கவிழ்க்கமுடியாது. அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்காக கடந்த சில நாட்களில் முயற்சி நடந்தது. ஐ.தே.க., மங்கள, ஸ்ரீபதி மேற் கொண்ட முயற்சிகள் படுதோல்வியடைந்தன. இவ்வாறு பெருந்தெருக்கள் அபிவிருத்தி அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே தெரிவித்தார்.

அமைச்சர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது,

நாட்டில் சமாதானத்தையும், அமைதியையும் நிலைநாட்டவே யுத்தம் நடைபெறுகிறது. மக்களை கொலை செய்ய அரசாங்கம் விரும்பவில்லை. ஆகையினால் தமிழீழ விடுதலைப்புலிகளிடம் நாங்கள் கேட்பது யாதெனில், இப்போதாவது அரசாங்கத்துடன் இணைந்து ஒன்றுபடுங்கள். சமாதானத்தை நிலைநாட்டி, நாட்டை முன்னேற்றப் பாதையில் இட்டுச் செல்ல ஒன்றுபட வாருங்கள்.

இன்றைய அரசை கவிழ்க்கமுடியாது. 2011 நவம்பர் வரும் வரை மஹிந்த ராஜபக்ஷதான் இந்நாட்டின் ஜனாதிபதி. அதை மாற்ற முடியாது. அதைத்தொடர்ந்து இன்னும் 6 வருடங்கள் 2017 நவம்பர் வரையும் மஹிந்த ராஜபக்ஷ தான் ஜனாதிபதி. அதற்கான பலமான சக்தி இருக்கிறது. அந்த சக்திக்கு ஆதரவைத் தர அமைச்சர் அன்வர் இஸ்மாயில் போன்ற முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் 18 பேர் பாராளுமன்றத்தில் இருக்கிறார்கள்.

இந்நாட்டு சரித்திரத்திலே இதற்கு முன் 18 முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் இருந்ததில்லை. உலக முஸ்லிம் காங்கிரஸ் தலைவர், உலக முஸ்லிம்களின் பெரியவர் இலங்கை வந்து முஸ்லிம் மக்களின் நண்பர் தான் இந்நாட்டின் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ என்று தெரிவித்துள்ளார். எனவே இன்றைய அரசில் முஸ்லிம் மக்கள் அஞ்சத் தேவையில்லை. நாட்டை முன்னேற்றப்பாதை நோக்கி இட்டுச் செல்வதுடன் இன்றைய அரசினால் நாடும் முன்னேற்றம் காணும்.

# காசநோய்க் கட்டுப்பாட்டில் எதிர்கொள்ளப்படும் பிரச்சினைகளும் அவற்றினை எதிர்கொள்ளலும்

யாழ். குடாநாட்டில் 180 காசநோயாளர் கள் 2007ஆம் ஆண்டு ஆனி மாதம் வரை இனம் காணப்பட்டுள்ளனர். இருவர் காச நோயினால் இறந்துள்ளனர். இவை காச நோய் பற்றிய விழிப்புணர்வு எமது மக்க ளிடையே அதிகம் ஏற்பட வேண்டிய அவசி யத்தினை ஏற்படுத்தியுள்ளது.



காசநோயினால் ஒருவர் பாதிக்கப்பட்டமையை அறியாதமையே பலர் சிகிச்சைக்கு வராது காலம் தாழ்த்துகின்றனர். இதற்கு இலகுவாக சாமனியர்களால் கணிக்கக் கூடியதாக பின்வரும் காசநோய் தாக்கம் உண்டென்பதற்கான பண்பறி சுட்டிகளின் புள்ளிகளைப் பயன்படுத்தலாம். காசநோய் உண் டென்பதற்கான பண்பறி சுட்டிகளின் மொத் தப் புள்ளிகள் 50% மேல் இருப்பின் அவர் கள் கட்டாயம் மார்பு நோய்ச் சிகிச்சை நிலையத்திற்கு சென்று வைத்தியப் பரிசோதனை யினை மேற்கொள்ளல் வேண்டும். இதன் போது சளிப் பரிசோதனை செய்யப்பட்டு காசநோய் உள்ளதா என்பது உறுதி செய் யப்படும்.

நீண்ட நாட்களாக சளி காணப்படுபவர் களும் காசநோய் ஏற்பட்டுள்ளதா என்பதற் கான பண்பறி சுட்டியினைக் கணித்துப் பார்த்தல் அவசியம். இருமுபவர்கள் அனை வரும் காசநோயாளிகள் அல்லர். காச நோயாளிகள் அனைவரும் இருமுப வர்கள் அல்லர்.

காசநோய் இனம் காணப்பட்ட சிலர் மருந்து எடுக்க வருவதில்லை. இதற்கு அவர்கள் நோய்க்கு முன்னுரிமை கொடுப் பதில்லை என்பதே முக்கிய காரணம். மேலும் சிலர் நோய் அறிகுறிகள் குறைந்தவுடன் மருந்து பாவிப்பதனை நிறுத்தி விடுகின்றனர். மேலும் சிலர் மதுபானம் பாவித்து மருந்து பாவிப்பதனைத் தவிர்க் கின்றனர். காசநோய்க்கான மருந்துகளை ஒழுங்காக 6 மாதங்களிற்கு எடுக்க வேண்டும். ஒழுங்கற்று மருந்துகள் எடுப்பதால் மருந்துக்கு எதிர்ப்புத் தாக்கம் உடைய கிருமி கள் உருவாகி இறப்பு ஏற்படும். கடந்த இரு வருடத் தில் யாழ்ப்பாணத்தில் இருவர் இவ்வாறு ஒழுங்கற்ற மருந்துப் பாவனையால் மருந்திற்கு எதிர்ப்பு சக்தி உள்ள கிருமிகள் உரு வாகி இறந்துள்ளனர். மருந்திற்கு எதிர்ப்புத் தன்மை உள்ள காசநோயினை MDR TB (Multi Drug Resistance Tuberculosis) என்று அழைப்பர். இவற்றிற்கு விசேடமான மருந்துகள் உண்டு.

ஆனால் இன்று அம் மருந்துகளுக்கு எதிர்ப்புத் தன்மை உள்ள காசநோய் க்கிருமிகள் XDR TB (Extensive Drug Resistan ce Tuberculosis) உருவாகி உள் ளன.

நேரடிக் கண் காணிப்பிலான சிகிச் சையே DOTS(Direct Obs erved Treatment Short course) முறையற்ற மருந் துப் பாவனையைத் தவிர்க்க உதவும். இதற்கான ஒத்துழைப்பினை நோயாளிகளும் அவர் களது குடும்பமும் அவர்கள் வாழும் சமூக மும் தரல் வேண்டும். நேரடிக் கண் காணிப் பான சிகிச்சையின் போது நோயாளி தனது வீட்டிற்கு அருகில் உள்ள வைத்திய நிலை யத்திற்கு அல்லது சுகாதார நிலையத்திற்கு சென்று முதல் இரு மாதங்களிற்கு மருந்துகளை சுகாதாரத் திணைக்கள உத்தியோகத்தர் முன்னிலையில் உள்ளெடுப்பர்.

**காசநோய் ஏற்பட்டுள்ளது என்பதற்கான பண்பறி சுட்டிகளும் அவற்றின் புள்ளிகளும்**

| பண்பறி சுட்டிகள் | புள்ளிகள் |
|---|---|
| 1.மூன்று கிழமைகளுக்கு மேல் தொடர்ச்சியான இருமல் | 20 |
| 2.மாலை நேரக் காய்ச்சல் | 20 |
| 3.உடல் நிறை இழப்பு | 15 |
| 4.இருமலுடன் இரத்தம் வெளியேறல் | 10 |
| 5.உணவில் விருப்பமின்மை | 10 |
| 6.உறவினர் யாராவது ஒருவருக்கு காசநோய் காணப்படல் | 05 |
| 7.நண்பர்களுக்கு காசநோய் காணப்படல் | 05 |
| 8.சுவாசிப்பதில் சிரமம் | 03 |
| 9.இரவில் வியர்த்தல் | 03 |
| 10.நெஞ்சில் நோ | 03 |
| 11.உடற் களைப்பு | 03 |
| 12.சலரோக நோய் காணப்படல் | 03 |
| மொத்தம் | 100 |

**(காசநோய் ஏற்பட்டுள்ளது என்பவற்றுக்கான நிகழ்தகவு இப் பண்பறி சுட்டிகளின் பெறுமனம் 50% விட அதிகமாகவுள்ள போது அதிகம் ஆகும்.)**

**Dr. சி. யமுனாநந்தா**
மாவட்ட காசநோய்த் தடுப்பு,
வைத்திய அதிகாரி,
யாழ்ப்பாணம்.

## இன்று ஒரு தகவல்

### அந்த எட்டுப்பேர் !

ஒரு பள்ளிக்கூடம். அதில் வசதியான வீட்டுப்பிள்ளை ஒருத்தன் படித்துக்கொண்டிருந்தான். இன்னொரு ஏழைப் பையனும் அங்கே படித்துக்கொண்டிருந்தான்.

இவர்கள் இரண்டு பேரும் ஒரே தெருவிலேதான் இருந்தார்கள். பணக்கார வீட்டுப்பையன் பெரிய பங்களாவிலே இருந்தான். ஏழைப் பையன் ஒரு மண்குடிசையில் வசித்து வந்தான். பணக்கார வீட்டுப் பையனுக்கு ஏவல் செய்தவற்குச் சில வேலையாட்கள் உண்டு. அதனாலே அவன் நன்றாகச் சாப்பிடுவான்... தூங்குவான்.

ஏதோ வரவேண்டும் என்பதற்காக பள்ளிக்கூடத்துக்கு வருவான்... போவான்... அவ்வளவு தான்!

ஆனால் ஏழைப்பையன் அப்படி அல்ல... காலையிலே எழுந்திருப்பான்... உடற்பயிற்சி செய்வான் அவர்கள் வீட்டிலே கிடைப்பது சாதாரண உணவு. அதை அளவோடு சாப்பிடுவான். வீட்டு வேலைகளைச் செய்வான் பாடசாலைக்கு தவறாமல் சென்று விடுவான்.

அவனுக்குக் கூடப் பிறந்த சகோதர சகோதரிகள் எட்டுப் பேர். அவர்கள் எல்லோரும் தன்னம்பிக்கையோடு அவரவர்கள் வேலை யைச் செய்து கொண்டிருந்தார்கள்.

இந்தப் பையன் எப்பொழுதும் உண்மையைத்தான் பேசுவான். கடமைகளை ஒழுங்காகச் செய்வான்... ஆசிரியர்களுக்கு அவனை மிகவும் பிடிக்கும். அதனால் அவனை அந்தப் பள்ளிக்கூடத்தில் மாணவர் தலைவனாக நியமித்திருந்தார்கள்.

ஒருநாள் வகுப்பிலே ஆசிரியர் எல்லா மாணவர்களுக்கும் ஒரு வேலை கொடுத்தார். எல்லோரும் அதைச் சுறுசுறுப்பாகச் செய்து கொண்டிருந்தார்கள். பெரிய இடத்துப் பையன் மட்டும் சோம்பலாக உட்கார்ந்திருந்தான்.

ஆசிரியர் அந்தப் பக்கமாக வந்தார். இதைப்பார்த்து விட்டார். உடனே மாணவர் தலைவனாக இருக்கிற ஏழைப் பையனைக் கூப் பிட்டார்.

"ஏன் அந்தப் பையன் இப்படி சும்மா உட்கார்ந்திருக்கிறான்? என்னவென்று விசாரித்துச் சொல்!..." எனச் சொல்லிவிட்டு உள்ளே போய்விட்டார். இவன் மெதுவாகப் போய் அவனிடம் விசாரித்தான்... "ஏன் இப்படிச் சோர்ந்து போய் இருக்கிறாய்?" எனக் கேட்டான்.

"என்னுடைய சிரமம் உனக்கு எப்படித் தெரியும்? வீட்டிலே என்னு டைய சௌகரியங்களைக் கவனிக்கும் வேலையாட்கள் இரண்டு பேரும் இன்று வேலைக்கு வரவில்லை. அதனால்... என்னுடைய வேலையெல்லாம் நானே கவனிக்கிற மாதிரி ஆகிவிட்டது... அத னாலே சோர்ந்து போய்விட்டேன்..." என்றான்.

அதன்பின் "அதுசரி... உன்னுடைய வீட்டிலே உன்னுடைய வேலைக்காரர்கள் வராத போது நீ எப்படிச் சமாளிக்கிறாய்?" என்று கிண்டலாகக் கேட்டான். இவன் ஏழை என்பதையும்... இவன் வீட்டிலே வேலை செய்வதற்கு யாரும் இல்லை என்பதையும் இப்படிச் சொல்லிக் கிண்டல் செய்தான்.

இந்த ஏழைப்பையனுக்கு அவனது கிண்டல் புரிந்தது. இருந்த போதிலும் அதை வெளியிலே காட்டிக் கொள்ளாமல் சிரித்துக் கொண்டே "எனக்கு அந்தக் கவலையே கிடையாது... என்னுடைய உதவிக்கு ... நான் நினைத்தவுடனே காரியத்தைச் செய்ய எட்டுப்பேர் எப்பொழுதும் தயாராக இருக்கிறார்கள்" என்றான்.

உள்ளே உட்கார்ந்து கொண்டிருந்த ஆசிரியர் காதிலே இது விழுந் தது. உடனே அந்த ஏழைப் பையனைக் கூப்பிட்டார். இவன் பொய் சொல்ல மாட்டான் என்பது அவருக்குத் தெரியும். அவனைச் சமாளிப்பதற்கு இப்படி ஒரு பொய் சொல்லியிருப்பான் என்பதையும் அவராலே ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

"நீ நினைக்கிற காரியத்தைச் செய்ய எட்டுப்பேர் தயாராக இருப்ப தாகச் சொன்னாயே... உன்னுடைய சகோதர, சகோதரிகளைக் குறிப் பிட்டு அப்படிச் சொன்னாயா?..." என்று கேட்டார். "இல்லை ஐயா... நான் அவர்களைக் குறிப்பிட்டு அப்படிச் சொல்லவில்லை..." என் றான் அவன். "அப்படியானால் நீ சொன்னதற்கு என்ன அர்த்தம்?" என்றார் ஆசிரியர்.

அப்பொழுது அந்தப் பையன் சொன்னான் "ஐயா நான் நினைப்பதைச் செய்து முடிக்க என்கூட இருக்கிற எட்டுப்பேர்கள் யாரென்றால் இரண்டு கால்கள், இரண்டு கைகள், வாய், மூக்கு, கண், காது.. ஆக மொத்தம் எட்டு. இவர்கள்தான் அந்த வேலையாட்கள்!

நான் சொல்வதைக் கேட்பதற்கு அவர்கள் எப்பொழுதும் தயார். அந்த அளவுக்கு என்னுடைய பயிற்சிகள், பழக்கவழக்கங் கள் மூலமாக அவர்களை நல்ல நிலையிலே வைத்திருக்கிறேன் என்றான்.

இந்தக்கதையை சுவாமி சின்மயானந்தர் சொல்வது வழக்கம்... இயற்கை நமக்குக் கொடுத்திருக்கிற வேலையாட்கள் இந்த எட்டுப் பேரும்! இவர்களை நல்லமுறையிலே வைத்திருந்து வேலைவாங்க வேண்டியது நமது கடமை...

இந்த கடமையை ஒழுங்காகச் செய்துகொண்டு வந்தால் வாழ்க் கையில் வெற்றி நிச்சயம்...! இல்லாவிட்டால் குழப்பம் தான்! புத்தி சரியாக இல்லாவிட்டால் இந்த வேலையாட்கள் நாம் சொல்வதைக் கேட்க மாட்டார்கள். ஒருத்தன் குடி போதையிலே தள்ளாடித் தள்ளாடிப் போய் ஒரு மரத்திலே முட்டிக் கொண்டான். தலையிலே கட்டுப் போட்டுக்கொண்டு மறுநாள் வந்தான்.

"ஏன்டா இப்படி?" என்று நண்பர்கள் கேட்டார்கள் "நான் 'ஒதுங் கிப்போ' என்றுதான் சொன்னேன். அது கேட்கவில்லை. அதனால் வந்தகாயம் தான் இது" என்றான். "எது கேட்கவில்லை? உன்னுடைய கால்களா?" என்றார்கள் நண்பர்கள்.

"இல்லை... அந்த மரம்... நான் எவ்வளவோ முறைகள் சொல்லியும் கேட்காமல் வந்து என்மீது மோதிக் காயப்படுத்திவிட்டது" என்றானாம் அவன்!

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## சட்டத்திற்கு முரணாக செயற்படுமாறு விடுத்த வேண்டுகோளை நிராகரித்தேன்

### பிரதம நீதியரசர் சரத் என் சில்வா

இலங்கையின் சட்டங்களுக்கு புறம்பான முறையில் எந்தவிதமான தீர்புகளையோ உத்தரவுகளையோ தான் பிறப்பிக்கவில்லை என்று பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தெரிவித்துள்ளார்.

சட்டத்திற்கு முரணாக செயல்படுமாறு சிலர் விடுத்த வேண்டுகோள்களை தான் நிராகரித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். மல்வானை அல் முபாரக் கல்லூரியில் இடம்பெற்ற கருத்தரங்கில் உரையாற்றும் போதே அவர் இந்த கருத்தை வெளியிட்டுள்ளார்.

பிரதம நீதியரசர் என்ற வகையில் இந்த நாட்டின் சட்டங்களை மதித்து அதன் பிரகாரம் நாட்டின் சட்டம் ஒழுங்கை காப்பாற்றுவதே தனது பணி என்றும் எக்காரணம் கொண்டும் சட்டத்திற்கு முரணாக தன்னால் செயற்பட முடியாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மக்கள் நிவாரணம் கோரியே நீதிமன்றம் வருகிறார்கள். நீதிமன்ற அதிகாரிகள் எந்த நேரமும் அவர்களுக்கு உதவத் தயாராக இருக்கவேண்டும்.

மனித விழுமியங்களைப் பாதுகாக்க வேண்டிய கடமை பொலிஸாருக்கும் உண்டு எனக் குறிப்பிட்ட பிரதம நீதியரசர், தாய்லாந்துக்கான தன்னுடைய விஜயத்தின் போது தன்னை இலங்கையின் பிரதம நீதியரசர் எனத் தெரியாமலே தன்னை மரியாதையாக வரவேற்றமையை நினைவு கூர்ந்தார். வாகன விபத்தொன்று நடந்தபோது சாரதியை அணுகிய பொலிஸ்காரர் முதலில் தனது அடையாளத்தைக் காட்டியே கதைத்ததாகவும் குறிப்பிட்டார்.

இலங்கையின் தற்போதைய நிலை மிகவும் கவலை அளிப்பதாகவும், நாடு அழிவினை நோக்கி சென்று கொண்டிருப்பதாகவும், இதற்கு நாட்டு மக்கள் அனைவரும் பொறுப்பேற்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

.இலங்கையில் நிலவும் இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கு உணர்வு பூர்வமாக நடவடிக்கை எடுக்கப்படுமானால் விரைவில் பிரச்சினைக்கு தீர்வு காண முடியும் என்றும் நீதியரசர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-5)

## மத்தியஸ்தர்கள் தினவிழா

நல்லூர் மத்தியஸ்தர்கள் தினவிழா எதிர்வரும் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு நல்லூர் மத்தியஸ்தர் சபைத் தவிசாளர் முத்தையா யோகராசா தலைமையில் கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாசாலையில் நடைபெறவுள்ளது.

விழாவில் பிரதம விருந்தினராக யாழ்.அரச அதிபர் க.கணேஷ் கலந்துகொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக இளைப்பாறிய மாவட்ட நீதிபதி மு.திருநாவுக்கரசு, நல்லூர் பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் சி.இரவீந்திரசர்மா, யாழ்.மாநகர ஆணையாளர் மு.செ.சரவணபவ, நல்லூர் பிரதேச சபைச் செயலாளர் பொ.வைரமுத்து, யாழ்.மாவட்ட மத்தியஸ்தர்கள் சபை பயிற்சியாளர் க.கணேசராசா, யாழ்.மாவட்ட மத்தியஸ்தர்கள் சபை நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் பீ.சதாதனன், சைவப் பிரகாச வித்தியாசாலை அதிபர் வா.ஜெயரட்ணம் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (அ)

## இராசிபலன்

10.07.2007
(ஆனி 26, செவ்வாய்க்கிழமை)
ஏகாதசி பின்னிரவு 01.25 மணிவரை
பரணி முற்பகல் 09.46 மணிவரை
இராகுகாலம் 02.58–04.28 மணிவரை
சுபநேரம் 10.28–11.58 மணிவரை
ஏகாதசி விரதம்
கார்த்திகை விரதம்

| | |
|---|---|
| மேடம் | பெரியயோர் சந்திப்பு, நண்பர்கள் உதவி, நல்ல முயற்சி, சயனசுகம். |
| இடபம் | கோபப்படுதல், வேலைச்சுமை, அதிக செலவு, காரிய அலைச்சல். |
| மிதுனம் | உஷ்ண நிலை, செய்தொழில் நன்மை, பணப் புழக்கம், உறவினர் வருகை. |
| கடகம் | உற்சாகம், வியாபார நன்மை, எடுத்த காரியம் கைகூடும், பண்வருவாய். |
| சிங்கம் | திட்டமிடல், அச்சமான நிலை, காரிய தாமதம், வீண் செலவு. |
| கன்னி | நண்பர்கள் மனஸ்தாபம், காரிய தாமதம், உடல்நலக்குறைவு, பணக்குறைவு. |
| துலாம் | அபூர்வ சந்திப்பு, சுபநிகழ்வு, முயற்சி பலிதம், விருந்துபசாரம். |
| விருச்சிகம் | சுகவாழ்வு, பகைவர் விலகுவர், பணவருவாய், காரிய அனுகூலம். |
| தனுசு | கௌரவக்குறைவு, தொழில் சிந்தை, சொத்துப்பிணக்கு, முயற்சி தாமதம். |
| மகரம் | பயந்த சுபாவம், கல்வியில் ஆர்வம், உறவினர் சந்திப்பு, ஆரோக்கியக்குறைவு. |
| கும்பம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், பிரயாண நன்மை, பொருள் சேர்க்கை, போசன நன்மை. |
| மீனம் | காரிய தாமதம், விவாதம், பணவிரயம், வேலைச்சுமை. |

- வளவன்



தமிழகம்–திருவாவடுதுறை ஆதீனத்தின் "தெய்வத் தமிழிசைச் செல்வர்" என்ற சிறப்பு விருது பெற்ற கலா பூஷணம், தாவடியூர் கே.எஸ்.ஆர்.திருஞானசம்பந்தன், லண்டன் ஈஸ்ட்காம் ஸ்ரீமுருகன் ஆலயத்தில் பண்ணிசைக் கச்சேரி நிகழ்த்துகையில் எடுத்த படம்.

## உள்ளூராட்சி வாரத்தில் யாழ்.நூலகத்தில் கண்காட்சி

யாழ்ப்பாணம் மாநகர சபையால் நடாத்தப்படும் உள்ளூராட்சி வார நிகழ்வின் ஒரு அங்கமாக , யாழ்.பொதுசன நூலகம் கண்காட்சி ஒன்றை ஒழுங்கு செய்துள்ளது. கண்காட்சி இன்று நண்பகல் 12.00 மணிக்கு யாழ்.மாநகர ஆணையாளர் மு.செ.சரவணபவவினால் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

14ஆம் திகதிவரை தினமும் காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணிவரை நடைபெறவுள்ள கண்காட்சியில் அண்மையில் இந்தியாவிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட நூல்கள் மற்றும் C.D க் கள் காட்சிப்படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## முஸ்லிம்–சிங்களவர் இடையே அம்பாறையில் முறுகல்

அம்பாறையில் முஸ்லிம் கிராமம் ஒன்றில் புத்தர் சிலை அகற்றப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து சிங்களவர் மற்றும் முஸ்லிம் மக்களிடையே முறுகல் நிலை உருவாக்கப்பட்டுள்ளது. போசன் போயா நாளன்று ஒரு குழுவினர் புத்தர் சிலை ஒன்றை அகற்றியுள்ளனர். அகற்றப்பட்டது பழங்கால புத்தர் சிலை என்றும் அது அந்த இடத்திலேயே நிறுவப்பட வேண்டும் என்றும் சிங்களவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இது தொடர்பாக அப்பகுதி ஜும்மா மசூதி அறங்காவலர்களிடமும் அரசாங்க அதிபர், பிரதேச செயலர் ஆகியோரிடமும் முறைப்பாடு செய்யப்பட்டது. இதனைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் இச்சம்பவத்தின் பின்னணியில் மாணிக்கமடு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உடந்தையாக இருந்தது தெரியவந்தது.

இதனால் அந்த அதிகாரி வேறு ஒரு பொலிஸ் நிலையத்துக்கு மாற்றப்பட்டார். ஆனால் ஒரு அரசியல் கட்சியின் தலையீட்டினால் அந்த இடமாற்றல் உத்தரவு இரத்து செய்யப்பட்டது. 'சிங்கள–முஸ்லிம் மக்களிடையே முறுகல் நிலையை உருவாக்க அந்த தீவிரவாத அரசியல் கட்சி முயற்சிக்கிறது' என்று அப்பகுதியினர் தெரிவித்துள்ளனர். (அ-5)

## புலோலி ப.நோ.கூ.ச.ஊழியர்களுக்கு அதிகரித்த சம்பளம் வழங்க நடவடிக்கை

(பருத்தித்துறை)

கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவினால் சிபார்சு செய்யப்பட்ட அதிகரித்த சம்பள உயர்வைப் புலோலி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் யூன் மாதம் ஊழியர்களுக்கு வழங்கியுள்ளது. மேலும் 2007 ஜனவரி மாதம் முதல் இச் சம்பள உயர்வை ஊழியர்களுக்கு வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் 66/2006ஆம் இலக்கச் சுற்று நிருபத்திற்கிணங்க புலோலி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தின் அதிகரித்த சம்பள உயர்வால் இப் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தில் பணியாற்றும் 61 ஊழியர்கள் பலனடைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-52)

சேற்றில் உள்ள முள்ளும் வேட்டை நாயின் பல்லும் இனவாதியின் சொல்லும் அதிகமாகக் குத்தும்.

-அயர்லாந்து

வலம்புரி

## அமைச்சர் மேர்வின் சில்வாவை கைது செய்ய முடியாதா?

விடுதலைப்புலிகளை ஆதரிப்பவர்களை எனது துப்பாக்கி மூலம் நானே சுட்டுக்கொல்லுவேன். இவ்வாறு அமைச்சர் மேர்வின் சில்வா கொழும்பிலிருந்து வெளிவரும் வார ஏடொன்றிற்கு அளித்த செவ்வியில் கூறியுள்ளார்.

இதற்கு முன்னதாக விடுதலைப்புலிகளுடன் தொடர்புடையவர்களைச் சுட்டுக் கொல்ல வேண்டுமெனக் கூறிய மேர்வின் சில்வா, இப்போது ஒருபடி மேலும் உணர்ச்சிவசப்பட்டு நானே சுட்டுக் கொல்வேன் என பகிரங்கமாகக் கூறியுள்ளார்.

பொறுப்பு வாய்ந்த அமைச்சர் ஒருவர் பகிரங்கமாக 'சுட்டுக் கொல்லுவேன்' எனக் கூறுவது இலங்கையின் சட்ட யாப்புகளுக்கு ஏற்புடையதா? இவ்விதம் கூறுவதை நீதிபரிபாலனம் ஏற்றுக் கொள்கின்றதா? என்பது புரியாத புதிராகவுள்ளதும்,

அதேநேரம் விடுதலைப்புலிகளுடன் தொடர்புடையவர்கள், ஆதரவாளர்கள் என அமைச்சர் மேர்வின் விளித்துக் கூறுவது தமிழ்மக்களையே என்பதை அவரின் செவ்வியிலிருந்து தீர்மானிக்க முடியும்.

அப்படியானால் தமிழ் மக்களைச் சுட்டுக் கொல்ல வேண்டுமென அமைச்சர் மேர்வின் கூறுகிறார். அத்துடன் சாதாரண சிங்கள மக்களைத் தமிழ் மக்களுக்கு எதிராக திசை திருப்பும் பணியையும் அவர் மேற்கொள்கின்றார் என்பது உறுதியாகின்றது.

சிங்கள மக்களைத் தூண்டிவிட்டு அவர்கள் மூலம் தமிழ் மக்களை கொன்றொழிக்கும் பயங்கர செயலைச் செய்வதில் ஈடுபட்டுள்ள அமைச்சர் மேர்வின் சில்வாவைக் கைது செய்து நீதிமன்றத்தில் நிறுத்தி தண்டனை பெற்றுக் கொடுப்பது பொறுப்புள்ள ஜனாதிபதி - அரசு என்பவற்றின் தார்மீகக் கடமையாகும்.

குற்றவாளிகள் என இனங்காண்பது, தண்டனை வழங்குவதெல்லாம் நீதிமன்றத்தின் கடமையாகும். இதை மாறி விடுதலைப்புலிகளுடன் தொடர்புடையவர்களை நானே சுட்டுக்கொல்வேன் என அமைச்சர் மேர்வின் சில்வா கூறியதிலிருந்து கொழும்பில் கடத்தப்படும் தமிழர்கள் விடயத்தில் அவருக்குத் தொடர்பிருக்கலாமோ என்ற சந்தேகம் எழுகின்றது.

எதுவாயினும் தனது துப்பாக்கியால் சுட்டுக் கொல்வேன் எனக் கூறிய அமைச்சர் மேர்வின் மீது சட்ட நடவடிக்கை எடுப்பது கட்டாயமானதாகும்.

அத்துடன் கிட்லர், இடியமின் ஆகியோரின் நாஸிசக் கொள்கையில் ஒரு ஜனநாயக அரசில் அங்கம் பெற்றுள்ள அமைச்சர் கூறிய பயங்கரமான கதைக்காக அவரை அமைச்சர் பதவிலிருந்தும் பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்தும் விலக்கி வைக்கவேண்டும்.

இதற்காகத் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உள்ளிட்ட நீதிக்காகக் குரல் கொடுக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களும், சமாதானத்தை வலியுறுத்தும் அரச சார்பற்ற நிறுவனங்களும் இணைந்து அமைச்சர் மேர்வின் சில்வாவுக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்ய வேண்டும்.

அமைச்சர் மேர்வின் சில்வாவின் கட்டுக்கடங்காத இனவெறிக்கு உரிய பாடம் புகட்டாதவரை இனவாத பேயை ஒழிக்க முடியாது. அதேசமயம் இலங்கை அமைச்சர் ஒருவர் விடுதலைப்புலிகளை ஆதரிப்பவர்களைச் சுட்டுக் கொல்லப் போவதாகக் கூறியது தொடர்பில் சர்வதேச சமூகம் இலங்கை அரசிடம் விளக்கம் கேட்க வேண்டும் என்பது சமாதான விரும்பிகளின் விருப்பமாகும்.

# மக்களை ஏமாற்றுவதற்கே யுத்தம் சர்வதேசத்தை ஏமாற்றுவதற்கே பேச்சு

## ஐக்கிய தேசியக் கட்சி எம்.பி. ரவி

சமாதான செயற்பாடுகள் விடயத்தில் அரசாங்கம் இரட்டை வேடம் போட்டுக் கொண்டிருக்காமல் பேச்சுவார்த்தையா? அல்லது யுத்தமா? என்ற தீர்மானத்திற்கு வரவேண்டும். எதிர்காலத்தில் சமாதானப் பேச்சுவார்த்தைகளை நடாத்துவதற்கு அரசாங்கம் எதிர்பார்க்குமாயின் தற்போது ஏன் யுத்தம் செய்ய வேண்டும்? என்று ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க கேள்வி எழுப்பினார்.

சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கான தகவல்கள் மீண்டும் வெளிவரத் தொடங்கியுள்ளமை குறித்துக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். இவ் விடயம் குறித்து அவர் மேலும் கூறியதாவது,

அரசாங்கம் மக்களை ஏமாற்றுவதற்காக யுத்தம் செய்து கொண்டிருக்கின்றது. மறுபுறம் சர்வதேச சமூகத்தை ஏமாற்றுவதற்காகப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கத் தயார் என்று அறிவித்துக் கொண்டிருக்கின்றது. கடந்த ஒன்றரை வருடத்தில் அரசாங்கம் பேச்சுவார்த்தைகளுக்கான ஆர்வத்தையோ அர்ப்பணிப்பையோ வெளிபடுத்தியதாக நாங்கள் அறியவில்லை.

இந்நிலையில் பேச்சுவார்த்தைகள் எனும்விடயம் அர்த்தமற்றதாகவே அமையும் என்று ஐக்கிய தேசியக் கட்சி கருதுகின்றது. அரசாங்கம் முதலில் முக்கியமான ஒரு விடயத்தை தீர்மானிக்க வேண்டும். அதாவது சமாதானப் பேச்சுவார்த்தை [illegible] பிரச்சினையைத் தீர்ப்பதா? அல்லது யுத்தம் மூலம் தீர்ப்பதா? என்பது குறித்து அரசாங்கம் முடிவு செய்ய வேண்[illegible]

யுத்த[illegible]ச் செய்து கொண்டு சமாதானப் பேச்சுக்குறித்துப் பேசிக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை. நாட்டில் இடம்பெறுகின்ற மனித உரிமை மீறல்கள் குறித்து சர்வதேச சமூகம் அதிருப்தியை வெளிக்காட்டும் போதெல்லாம் அரசாங்கம் சமாதானப் பேச்சுக்கான ஆர்வத்தை வெளியிடும் நிலைமையே காணப்படுகின்றது.

இது அரசாங்கத்தின் இரட்டை வேடத்தை வெளிக்காட்டுகின்றது. சமாதானப் பேச்சுவார்த்தை விடயத்தில் அரசாங்கம் இரட்டை வேடம் போடுவது ஆரோக்கியமானவிடயம் அல்ல என அவர்மேலும் தெரிவித்தார். (ந-5)

# மட்டு.வில் இராணுவ முகாமாக தமிழர்களின் வழிபாட்டுத் தலம்

## தமிழீழ விடுதலைப்புலிகள் கண்டனம்

(கொழும்பு)

மட்டக்களப்பில் உள்ள புகழ்பெற்ற தாந்தாமலை தமிழர் வழிபாட்டு ஆலயத்தை இராணுவம் ஆக்கிரமித்து இராணுவ முகாமாக மாற்றியமை ஒரு கலாசாரப் படுகொலை என்று தமிழீழ விடுதலைப்புலிகளின் சமாதான செயலகம் கண்டனம் தெரிவித்துள்ளது. விடுதலைப்புலிகளின் சமாதான செயலகம் நேற்று விடுத்துள்ள அறிக்கையில்,

தமிழ் மக்களின் வழிபாட்டுத் தலங்களை இராணுவம் நீண்ட காலமாக ஆக்கிரமித்து வருகின்றது. தமிழ் மக்களின் கலாசார உணர்வுகளுக்கு மதிப்பளிக்காமல் இராணுவப் பயன்பாட்டுக்காக அவற்றை பயன்படுத்துகின்றது. அண்மையில் மட்டக்களப்பில் உள்ள மிகப் புகழ்பெற்ற தாந்தாமலை இந்து ஆலயத்தை இராணுவம் ஆக்கிரமித்துள்ளது.

தாந்தாமலை ஆலயத்துக்கு வருகை தரும் பக்தர்கள் தங்கிச் செல்வதற்கான உட்கட்டமைப்புகளும் அங்கு உள்ளன. ஆனால் தற்போது இராணுவம் அவற்றை ஆக்கிரமித்துள்ளது. ஜூலை 8 ஆம் திகதி தொடக்கம் 16 நாள்களுக்குத் தாந்தாமலை ஆலயத் திருவிழா நடைபெறும்.

இயல்பான காலங்களில் தமிழர்களை ஈர்க்கும் வகையில் அத் திருவிழா நடைபெறும். ஆனால் தற்போது கோவிலும் அதன் உட்கட்டமைப்புக்களும் இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டு விட்டதால் பக்தர்கள் இரவு நேரங்களில் தங்க இயலாத நிலை உருவாக்கப்பட்டுள்ளது.

மேலும் பக்தர்கள் மலை உச்சிக்குச் சென்று வழிபாடு நடத்தவும் தடை விதித்துள்ளது. கோவில் குருக்கள் மட்டுமே பூசைகளை மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளார். இதனால் மட்டக்களப்பில் வாழும் தமிழர்களின் மதம் மற்றும் கலாசாரத்துடன் ஒன்றிணைந்திருக்கும் வழிபாடு மேற்கொள்வது நிரந்தரமாக மறுக்கப்பட்டுள்ளது. இது கலாசாரப் படுகொலை அல்லவா? என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-1)

# அமெரிக்காவின் மேலாதிக்கத்தை எதிர்க்க ஈரானை விட ஈழப் பிரச்சினையே சரியானது

## தமிழக சட்டப் பேரவை உறுப்பினர் தெரிவிப்பு

அமெரிக்க மேலாதிக்கத்தை எதிர்க்க ஈரானை விட ஈழப் பிரச்சினையே சரியான களம் என்பதை இந்தியா இடதுசாரிகள் புரிந்து கொள்ள வேண்டும் என்று தமிழக சட்டப்பேரவை உறுப்பினர் ரவிக்குமார் (விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பு) தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டிலிருந்து வெளியாகும் வாரம் இருமுறை இதழான ஜூனியர் விகடனில் அவர் எழுதியுள்ள கட்டுரையில் இதனைத் தெரிவித்துள்ளார். இலங்கை அரசு ஒரேநேரத்தில் பலமுனைகளில் யுத்தத்தை நடத்திக் கொண்டிருக்கின்றது. தமிழர்கள் மீது மட்டுமன்றி மனித உரிமை அமைப்புக்கள் மீதும் அதுதாக்குதல் தொடுத்து வருகின்றது. இப்போது இலங்கை அரசின் தாக்குதலுக்கு ஆளாகியிருப்பது சர்வதேச சுயாதீன மாண்புமிக்கோர் குழு என்ற அமைப்பாகும்.

இந்தக்குழு இலங்கை அரசால் அமைக்கப்பட்டதுதான். இதன் தலைவராக இருப்பவர் இந்தியாவின் முன்னாள் உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி பி.என்.பகவதி ஆவார். ஆட்கடத்தல், சட்டத்திற்குப் புறம்பான கொலைகள் உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுக்கள் இலங்கை இராணுவத்தின் மீதும் பொலிஸ் மீதும் கூறப்பட்டு வருகின்றது.

அப்படிக் கூறப்பட்டவற்றில் நவம்பர் 2005ற்குப் பிறகு நடந்த 16 சம்பவங்கள் பற்றி விசாரிப்பதற்காக இலங்கை அரசாங்கத்தால் ஆணைக்குழு ஒன்று அமைக்கப்பட்டது. அதில் இலங்கையைச் சேர்ந்த எட்டுப் பேர் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

2006 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் இந்த ஆணைக் குழு அமைக்கப்பட்டது. விசாரணைக் ஆணைக்குழு நடவடிக்கைகள் பற்றி தமது கடுமையான அதிருப்தியை சர்வதேச குழு வெளிப்படுத்தியுள்ளது. 2006 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் விசாரணைக்குழு அமைக்கப்பட்ட போதிலும் 2007 ஆம் ஆண்டு மே மாதம் வுரை அது முதற்கட்ட விசாரணைகளைக் கூட நடத்தவில்லை.

விசாரணை மற்றும் சாட்சிகளைப் பாதுகாத்தல் முதலியவற்றுக்கான ஏற்பாடுகள் எதுவும் செய்யப்படவில்லை என்று சர்வதேச குழு வெளிப்படையாகக் குற்றஞ்சாட்டியுள்ளது. அது மட்டுமன்றி இலங்கையில் தற்போது நடந்து வரும் மனிதஉரிமை மீறல்களை விசாரிப்பதற்கான அதிகாரமோ சக்தியோ விசாரணை ஆணைக்குழுவுக்கு இல்லை. சர்வதேச குழுவுக்கும் இல்லை. ஆனால் அத்தகைய அதிகாரம் இந்த அமைப்புக்களுக்கு இருப்பதுபோல இலங்கை அரசாங்கத்தைச் சேர்ந்த அதிகாரிகள் ஒருபொய்யான கருத்தைப் பரப்பி வருகின்றனர் என்றும் அந்த சர்வதேச குழு தனது கண்டனத்தைத் தெரிவித்துள்ளது. இலங்கை அரசுக்கு சர்வதேச அரங்கில் தற்போது மேலும் ஒரு நெருக்கடியும் ஏற்பட்டிருக்கின்றது. அமெரிக்க அரசைச் சேர்ந்த 50 நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமெரிக்க ஜனாதிபதிக்கு இலங்கைப் பிரச்சினை தொடர்பாக கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளனர்.

இலங்கையில் மீண்டும் போர் மூண்டதற்குப் பிறகு ஆயிரக் கணக்கானோர் கொல்லப்பட்டுள்ளதையும் சுமார் 3 இலட்சம் பேர் உள்நாட்டிலேயே அகதிகளாக இடம்பெயர்ந்திருப்பதையும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஜூன் 28 ஆம் திகதி அனுப்பப்பட்டுள்ள அந்தக் கடிதத்தில் இலங்கையில் அமைதியை ஏற்படுத்த மேலும் தீவிரமான நடவடிக்கைகளை எடுக்குமாறு வற்புறுத்தியுள்ள அந்த உறுப்பினர்கள், அமெரிக்க அரசு இதில் தலைமைப்பாத்திரம் வகிக்க வேண்டும் எனவும் வற்புறுத்தியிருக்கின்றார்கள்.

இலங்கை அரசின் மனித உரிமை மீறல்கள் பற்றி அமெரிக்கா கவலை தெரிவித்திருப்பது ஒரு விதத்தில் நல்லதென்ற போதிலும் அதை வேறு விதமாகவும் பார்க்க வேண்டியிருக்கின்றது. ஒரு அரசாங்கத்தைத் தனது பிடிக்குள் முழுமையாகக் கொண்டு வர மனித உரிமை மீறல்கள் என்ற ஆயுதத்தை அமெரிக்கா பயன்படுத்தும் என்பது வரலாறு.

இலங்கை அரசு சில மாதங்களுக்கு முன்பு அமெரிக்காவோடு ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டுள்ளது. புதிய கொள்வனவுகள் மற்றும் மாற்றுச் சேவைகள் ஒப்பந்தம் என்ற அந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டதன் மூலம் அமெரிக்கப் படைகள் தமது நாட்டில் வந்து தங்குவதற்கும் கடற்படைக் கப்பல்கள் தமது நாட்டுத் துறைமுகத்தைப் பயன்படுத்துவதற்கும் இலங்கை அரசு ஒப்புக் கொண்டிருக்கின்றது.

அமெரிக்க இராணுவ் நடவடிக்கைகளுக்கு இந்தியாவும் தோழனாக மாறிக் கொண்டிருக்கும் இன்றைய சூழலில் இலங்கையில் நடந்து வரும் அமெரிக்கத் தலையீடுகள் பற்றி இந்திய ஆளும் வர்க்கம் கவலைப்படாது. ஆனால் இது பற்றி இடதுசாரிகளும் மௌனம் காப்பது வியப்பளிக்கின்றது. இலங்கையில் தமிழர்களுக்குத் தனிநாடு வழங்கப்பட வேண்டுமா? அல்லது அங்கே கூட்டாட்சி நீடிக்க வேண்டுமா? என்ற பழைய பிரச்சினையைப் பற்றி மட்டுமே இந்திய இடதுசாரிகள் இப்போதும் பேசிக்கொண்டுள்ளனர். தற்போதைய அமெரிக்க இராணுவ விஸ்தரிப்புக் கொள்கையின் பின்னணியில் ஈழத் தமிழர் பிரச்சினையை அணுகுவதற்கு அவர்கள் முன்வர வேண்டும்.

அமெரிக்க அணுசக்தி போர்க் கப்பல் நிமிட்ஸை எதிர்த்துப் போராட்டத்தில் ஈடுபட்ட இடதுசாரிகள் அதேபோல் இலங்கையில் நடந்து கொண்டிருக்கும் அமெரிக்க இராணுவ நடவடிக்கைகளையும் எதிர்த்துக் களம் இறங்க வேண்டும். இந்தியாவின் வடக்கிலும் கிழக்கிலும் குவிந்துள்ள அவர்களது கவனம் தெற்கு நோக்கியும் திரும்ப வேண்டும்.

அமெரிக்க மேலாதிக்கத்தை எதிர்ப்பதற்கு ஈரான் பிரச்சினையைக் காட்டிலும் ஈழப்பிரச்சினையே சரியான களம் என்பதை இந்திய இடதுசாரிதுள் இனியாவது புரிந்து கொள்வார்களா? என்று அவர் கேள்வி எழுப்பியுள்ளார். (ச-5)

# கிழக்கில் புதிய பொலிஸ் நிலையங்கள் அமைக்க ஜனாதிபதி மகிந்த உத்தரவு

கிழக்கு மாகாணத்தில் ஐந்து பொலிஸ் நிலையங்களையும் 25 பொலிஸ் சோதனைச் சாவடிகளையும் அமைக்க நடவடிக்கை எடுத்திருப்பதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் செயலகம் அறிவித்துள்ளது.

வாகரை, கொக்கட்டிச்சோலை,வவுணதீவு,கரடியனாறு,ஆயித்திமலை ஆகிய பகுதிகளில் இந்த பொலிஸ் நிலையங்கள் அமைக்கப்படும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

அப் பகுதிகளில் 25 சோதனைச் சாவடிகளையும் அமைக்குமாறும் மகிந்த உத்தரவிட்டிருப்பதாக அவரது செயலகம் அறிவித்துள்ளது. அலரி மாளிகையில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற கிழக்கு மாகாண அரச அதிகாரிகளுடனும் பொலிஸ் அதிகாரிகளுடனுமான சந்திப்பில் இந்த உத்தரவை மகிந்த பிறப்பித்ததாக கூறப்படுகிறது.

திருகோணமலையில் மேலும் ஏழு பொலிஸ் நிலையங்களையும் ஆறு சோதனைச் சாவடிகளையும் அம்பாறையில் மேலும் இரண்டு பொலிஸ் நிலையங்களையும் எட்டு சோதனைச் சாவடிகளையும் அமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் மகிந்த உத்தரவிட்டிருக்கிறார். (எ-5)

## கொழும்பில் நேற்று...

பொலிஸ் அத்தியட்சகர் அஜித் பொன்சேகா தெரிவித்துள்ளார்.கோட்டை, புறக்கோட்டை, மருதானை, கொம்பனி தெரு, வாழைத்தோட்டம் மற்றும் மாளிகாவத்தை போன்ற பகுதிகளில் தேடு தல் நடத்தப்பட்டுள்ளன. இத்தேடுதல் நடவடிக்கையின் போது சிலர் விசாரணைக்காக கைது செய்யப்பட்டதுடன் அவர்களது அடை யாளத்தினை உறுதிப் படுத்திய பின்னர் விடு விக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் அத்தியட்சகர் மேலும் தெரிவித்தார். (சு-5)

## மட்டுவில் தெற்கில்...

ஒன்றில் வைத்து சுட்டுக்கொன்று விட்டு தப்பிச் சென்றுள்ளதாக விசாரணை களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கொல்லப்பட்ட இளைஞன் குழந்தைப் பருவத்திலிருந்தே மூட்டு வாத நோயால் பாதிக்கப்பட்டவர் என உறவினர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட சாவகச்சேரி நீதிவான் பிரேத பரிசோதனையின் பின் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு சாவகச்சேரிப் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (சு-5)

## கிளி.-முல்லைத்தீவைக்...

1992 ஆம் ஆண்டு ஏப் பரல் 28 ஆம் திகதி அரசாங்கம் ஆக்கிமித் திருந்தது. கிழக்கு மாகாணம் என்பது தமிழ் முஸ்லிம்,சிங்கள மக்கள் சமமாக வாழும் பகுதி. விடுதலைப்புலிகளால் அங்கு அதிகாரத்தை கைப்பற்ற முடியாது.

எந்த நேரத்திலும் கிழக்கின் அதிகாரத்தை இராணுவம் கைப்பற்றலாம். அதே நேரத்தில் இராணுவம் அங்கு நிற்கமுடியாது. ஆனால் முல்லைத்தீவு,கிளிநொச்சியைக் கைப்பற்றலாம். அதற்கான முழு ஒத்துழைப்பையும் ஐக்கிய தேசியக்கட்சி அளிக்கும். யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியபோது ஐக்கிய தேசியக்கட்சி பாராட்டியது.

1992-1994 ஆம் ஆண்டு காலப் பகுதியில் ஐக்கிய தேசியக்கட்சியின் ஆட்சிக்காலத்தில் கிழக்கில் பாரிய மனித உரிமை மீறல்கள் இருந்ததில்லை. 3 இலட்சம் மக்களும் இடம்பெயர்ந்ததும் இல்லை. யுத்தத்தை நிறுத்த வேண்டுமென்றோ பயங்கரவாதத்திற்கு எதிராகவோ அனைத்துலக சமூகம் ஒருபோதும் கருத்துத் தெரிவிக்கவில்லை. மாறாக மனித உரிமைகள் பற்றியே பேசுகிறது என்றார் அவர். (சு-5)

## கண்காணிப்பாளர்களின்...

ளதாகவும் அவர் தெரிவித் தார். கடந்த வாரம் விடுதலைப்புலிகளை கிளி நொச்சியில் சந்தித்துப் பேசினோம். அச் சந் திப்பில் கண்காணிப்புக்குழு மேற்கொண்டுள்ளகட்டமைப்பு மாற்றம் குறித்து தெளிவாக விளக்கப்பட்டது.

எமது குழுவின் மாற்றங்கள் குறித்து அரசாங்கத்திற்கும் அரச சமாதான செயலகத்திற்கும் தெளிவுபடுத்தியுள்ளோம்.

விடு தலைப்புலிகளுடனான மாதாந்த சந்திப்பை உயர் மட்டத்தினருடன் மேற்கொள்ள கண் காணிப்புக்குழு தீர்மானித்துள்ளதாக சொல் பேர்க் மேலும் தெரிவித்தார். (சு)

## சவுதியில் மரண தண்டனையை...

என்பது சிரச்சேதத்தின் மூலமே நிறைவேற்றப்படும். இவருடைய இந்த வழக்கை சர்வதேச அபய நிறுவனமும் ஹொங்ஹொங்கை தளமாகக் கொண்டு செயற்படும் ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவும் கையிலெடுத்துள்ளது.

அந்தக் குழந்தைக்கு பால் புகட்டும் போதே மூச்சுத் திணறல் ஏற்பட்டு என்றும் அதனை அந்தப் பெண்ணால் காப்பாற்ற முடியாமல் போய்விட்டது என்றும் ரிசானா கூறுவதாக இந்த அமைப்புக்கள் கூறுகின்றன.

அந்தப் பெண்ணுக்கு இந்த விவகாரம் நடைபெற்ற முழுக்காலப் பகுதிக்கும் எந்த விதமான சட்ட பிரதிநிதித்துவம் வழங்கப்பட வில்லை என்றும் அவர்கள் கூறுகிறார்கள்.

அது மாத்திரமன்றி மிகவும் முக்கியமான ஒரு விடயம் என்னவென்றால் அந்தக் குழந்தை இறந்த சம்பவம் நடந்தபோது இந்தப் பணிப்பெண் பராயத்திற்கு வராதவராகவே இருந்தார் என்றும் அவர்கள் கூறுகிறார்கள்.

இவரை இந்தப் பணிக்கு ஏற்பாடு செய்து கொடுத்த வேலை வாய்ப்பு ஏற்பாட்டாளர் அவருக்கு போலியான ஆவணங்களை ஏற்பாடு செய்து அவருக்கு ஆறு வயது அதிகமாக காட்டியிருந்தனர் என்றும் அவர்கள் கூறுகிறார்கள்.

ஆனால் அவரது பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் அப்போது அவருக்கு 17 வயது மாத்திரமே என்று கூறுகிறது. ஆனால் இந்தப் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

இந்த விடயத்தில் சவுதி அரசா தலையிட வேண்டும் என்று இந்தப் பெண்ணுக்கு ஆதரவாக குரல் கொடுப்பவர்கள் கோரியுள்ளனர். (சு-5)

## யுத்த நிறுத்த...

கொள்ளப்பட்டு வருவதாகவும் வசந்த கரனாகொட கூறியுள்ளார்.

எதிர்காலத்தில் இலங்கையின் மேற்கு மற்றும் தென்கிழக்கு கடற்பிரதேசங்களில் மேற்கொள்ளப்படவுள்ள கனிய எண்ணெய் வளம் தொடர்பான ஆராய்ச்சி நடவடிக்கைகளில் கடற்படை பங்களிப்பை வழங்கவுள்ளது. தற்போதுள்ள கடல் எல்லையை விட பல மடங்கு அதிகமான கடல் வலயத்தை தனித்துவம் மிக்க பொருளாதார வலயத்தின் அடிப்படையில் 2009 ஆம் ஆண்டு இலங்கை அரசாங்கம் கொண்டிருக்கும் என்பதால் கடற்படையின் முக்கியத்துவம் மேலும் அதிகரிக்கும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (சு-5)

## மதவாச்சியில்...

லில் சென்று கொண்டிருந்த அவரை ஆயுதாரிகள் சுட்டுக்கொலை செய்துவிட்டு தப்பிச் சென்றுள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (சு-5)

## மங்கள தலைமையிலான...

இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு முன்னாள் அமைச்சரும் சிறிலங்கா சுதந்திரக்கட்சி மக்கள் பிரிவின் அமைப்பாளருமான மங்கள சமரவீர இந்தியாவுக்குச் செல்லவுள்ளார்.

இவருடன் சிறிபதி சூரியாராச்சியும் செல்கிறார். எதிர்வரும் 11 ஆம் திகதி இந்தியாவுக்குச் செல்லும் அவர்கள் இலங்கையின் தற்போதைய நிலைமை குறித்தும் தமது கட்சியின் எதிர்கால செயற்பாடுகள் குறித்தும் இந்திய ஆளும் தரப்பினருக்கு விளக்கமளிக்கவுள்ளனர்.

இந்தியாவினால் இலங்கைக்கு வழங்கப்படும் ஆயுத உதவி,சமாதான முயற்சிகளுக்கான இந்தியாவின் அனுசரணை என்பன குறித்தும் பேசவுள்ளதாக மங்கள சமரவீரவை மேற்கோள்காட்டி செய்திகள் வெளியாகியுள்ளன.

இதேவேளை சிறிலங்கா சுதந்திரக்கட்சி மக்கள் பிரிவு இன்று சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியினரைச் சந்தித்து ஆலோசனை நடாத்தவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (சு-5)

# பிரட்ஸ்கரின் பணி ஓகஸ்டில் பூர்த்தி

(கொழும்பு)

கொழும்பில் உள்ள நோர்வேத் தூதுவர் ஹான் பிறட்ஸ்கர் தனது பணியை ஓகஸ்ட் மாதத்துடன் நிறைவு செய்கிறார்.

கொழும்பிலிருந்து ஒஸ்லோவிற்குச் செல்வதற்கு முன்னதாக கிளிநொச்சிக்கு விஜயம் செய்து புலிகளின் உயர் மட்டப் பிரதிநிதிகளை இவர் சந்திக்கவுள்ளார்.

அம்பாந்தோட்டை ,சிகிரியா போன்ற இடங்களுக்கும் விஜயம் செய்து அங்கு நோர்வேயின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்திப் பணிகளை இவர் பார்வையிடுவார் என தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன.தனது பணியை நிறைவு செய்து கொண்டு ஒஸ்லோவுக்கு விஜயம் செய்யும் ஹான்பிரஸ்கர் நோர்வேயின் வெளியுறவு அமைச்சில் உயர் பதவி ஒன்றை வகிக்கவுள்ளதாகவும் தெரியவருகிறது. (சு)

# கிழக்கு மாகாண புனரமைப்புப் பணிகளுக்கு அரசு 1200 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தின் விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு வேலைகளை துரிதப்படுத்தும் முகமாக அரசாங்கம் ஆயிரத்து 200 மில்லியன் ரூபாயினை ஒதுக்கியுள்ளதாக மீள் குடியேற்ற அமைச்சர் ரிசாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

ஆயுத மோதல்களினால் இடம் பெயர்ந்த 33 ஆயிரத்து 314 இற்கும் அதிகமான குடும்பங்கள் விடுவிக்கப்பட்ட பகுதிகளில் மீளக்குடியமர்ந்துள்ளனர்.

வாகரையில் 4 ஆயிரத்து 227 குடும்பங்களும் வெல்லாவெளியில் 8 ஆயிரத்து 718, கொக்கட்டிச் சோலையில், 6 ஆயிரத்து 314, வவுணதீவில் 7 ஆயிரத்து 211 மற்றும் வெருகல்,கதிரவெளி,பனிச்சங்கேணி,பூநகர் ஆகிய பகுதிகளில் 6 ஆயிரத்து 817 குடும்பங்களும் கடந்த சில மாதங்களில் மீள் குடியேறியுள்ளனர்.

முன்னர் மின்சாரம் இல்லாத வாகரைப் பிரதேசத்திற்கு மின் கம்பங்கள் நடப்பட்டு அப் பகுதி மக்களுக்கு மின்சாரம் வழங்கப்படுகிறது. கிழக்கு மாகாணத்தின் கரையோரப் பிரதேசங்களின் ஆழ் கடல் மீன்பிடித்தலுக்கு இருந்த தடை நீக்கப்பட்டுள்ளதால் அப் பகுதி மீனவர்களின் நாளாந்த வருமானம் அதிகரித்துள்ளது என்றார் அமைச்சர். (சு)

## ஒவ்வொரு...

ஒவ்வொரு 6 மணிநேரத்துக்கு ஒரு பாலியல் வல்லுறவுச் சம்பவமும் நிகழ்கின்றன. ஒவ்வொரு 12 மணி நேரத்துக்கும் சிறார்கள் பாலியல் துன்புறுத்தலுக்குள்ளாகின்றனர். மேற்கு மாகாணத்தின் வட பகுதியில் 2006 ஆம் ஆண்டு 8 ஆயிரத்து 225 குற்றச் செயல்கள் பதிவாக இருந்தன என்றார் அவர். (எ-5)

JAFFNA JAIPUR CENTRE
DISABILITY REHABILITATION
யாழ்.ஜெய்ப்பூர்
வலுவிழந்தோர் புனர்வாழ்வு
நிறுவனம்
20-ம் ஆண்டு நிறைவு-கண்காட்சி
பிரதம விருந்தினர்
வலரி ஒவேட் அவர்கள்
ICRC யாழ் வதிவிடப் பிரதிநிதி
காலம்:- யூலை 10,11,12-ம் திகதிகளில்
நேரம்:- காலை 9.30-மாலை 3.00 வரை
இடம் :- நிறுவன பணிமனை
05, பழைய பூங்கா வீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
பிரவேசம்:- இலவசம்
மாற்றுவலுவுடையோர் உபயோகிக்கும் செயற்கை அவயவங்கள்,சார்புறுப்புக்கள்,சக்கர நாற்காலிகள், முச்சக்கர வண்டிகள் போன்ற நிறுவனத்தில் உற்பத்தி செய்யப்படும் பல்வேறுபட்ட உபகரணங்கள் தொடர்பான கண்காட்சிக்கு பயனாளிகள் ,மாணவர்கள், ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
யாழ்.ஜெய்ப்பூர் நிறுவன முகாமைத்துவ குழுவினரும்,பணியாளர்களும்
(79)

வடமராட்சி லயன்ஸ் கழக ஆதரவில், 5-ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை
இலவச பயிற்சிக் கருத்தரங்கு.
திரு.வே.அன்பழகன் (யாழ்.பிரபல ஆசிரியர்)
இடம்:- நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்
காலம்:- 14.07.2007. 9.00 a m-2.00 p m
பதிவுகள்:- பாடசாலை அதிபரின் ஊடாக
பதிவு செய்யுமிடங்கள் :- *நெல்லியடி:* லயன் எஸ் அகிலதாஸ் நெல்லை"சில்க்ஸ். லயன் சி.சிவம் சிதம்பரப்பிள்ளை புத்தகசாலை. *பருத்தித்துறை:* லயன் எஸ்.பத்மநாதன் கனன் போட்டோ கொப்பி, லயன் என்.சற்குணராஜா சுசீலா நகை மாளிகை
(பதிவுகள் 500 மாணவர்களுக்கு மட்டும்)
லயன் S.தவச்செல்வன்
செயலாளர்.
(சி-215)

[illegible] வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.03, இரண்டாம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.07.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.